# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 73/2020 | Village | : | |
| Prosecution witness | : | PW-26 | Taluk | : | |
| Name | : | திரு.கோபிநாத் | Occupation | : | |
| Father Name | : | திரு. தனபால் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.9.25.**

A8,10,11 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் தமிழ் பல்கலை கழக காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 12.6.2019 அன்று தஞ்சாவூர் ஆயுத படையில் முதல்நிலை காவலராக பணியாற்றினேன். அது சமயம் ந டுகாவேரி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் தொலைபேசி மூலம் அழைத்தன் அடிப்படையில் சம்பவ இடமான பனைவெளி கிராமம் வெண்ணாற்று நடுகரையில் இருந்த இறந்துபோன அடையாளம் தெரியாத 22 வயது மதிக்கதக்க வாயில் துணி கட்டபட்டிருந்த பிரேதத்தை நான் பல்வேறு கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். அந்த புகைப்படங்களை ஆய்வாளருக்கு அனுப்பிவைத்தேன். அவைகள்தான் தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது. அது **சா.பொ.11 வரிசை (21 எண்ணிக்கை)** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வெண்ணாற்று கரையில் எத்தனை மணிக்கு போய் புகைப்படம் எடுத்தேன் என்றால் 11.30லிருந்து 11.45 வரை. அப்போது பிரேதம் வெண்ணாற்று கரையில்தான் இருந்ததா என்றால் ஆமாம். பிரேதம் அருகில் கார் இருந்ததா என்றால் இல்லை. அந்த கார் என்றைக்கு புகைப்படம் எடுத்தேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து புகைப்படம் எடுத்தேன். இந்த கார்தான் என்று யார் சொன்னார் என்றால் ஆய்வாளர்

சொன்னார். நான் அந்த புகைப்படத்தை ஆய்வாளரிடம் என்றைக்க ஒப்படைத்தேன் என்றால் 12.6.2019 அன்றே ஒப்படைத்தேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.